வலயக் கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகம் -

**"COVID 19 கால மாற்று உபாய கல்வி நிகழ்ச்சிதிட்டம் - 2020**
**COVID19 Period Alternative Strategic Education Programme -2020"**

**வலயக் கல்வி அலுவலகம்**
**மட்டக்களப்பு மேற்கு**

**22 தமிழ் மொழியும் இலக்கியமும் III** | **மாதிரிப் பரீட்சை- 1**

தரம் - 11 | நேரம் - 2 மணித்தியாலங்கள்

- **01 , 02 , 03 , 04 ஆம் வினாக்களுக்கும் 05 , 06 , 07 ஆம் வினாக்களிலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

01. சுருக்கமாக விடை தருக.

(1) முதுமொழி வெண்பாவில் கூறப்படும் நீதிக்கருத்து யாது?

(2) வாத மகா சபை என்று பண்டிதமணி எதனைக் கூறுகின்றார்?

(3) கம்பியூட்டர் என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்? அது எந்த சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

(4) சினிமா மொழி என்றால் என்ன?

(5) ககன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்.

(அ) ககனம் என்பது யாது?

(ஆ) காயசித்தி என்பதை விளக்குக?

(6) தாம் விரும்பிய விடயம் கிடைக்காவிட்டால் அதற்காக அறிவில்லாதவர்கள் யாது செய்வர் என பாரதி கூறிய செயல்கள் இரண்டு தருக?

(7) “ஓர் தட்டிலே பொன்னும்” எனத் தொடங்கும் பாடலினைப் பாடியவர் யார்? எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது.

(8) இராமன் காடு வந்ததால் கிடைத்த நன்மை யாது என கோசலை கூறுகின்றாள்?

(9) “திரிகடுகம்” எனும் நூலில் கூறப்படும் மூன்று கருத்துக்களும் எவை.

(10) வெற்றிவேற்கை எனும் நூலில் “தேம்படு பனையில்....” எனும் பாடல் தரும் செய்தி யாது?

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக?

(அ) சுழித்து நீர் வரு துறை ஆற்றை சூழ்படை
கழித்து நீக்கியது என கள்ள ஆசையை
அழித்து வேறு அவனி பண்டு ஆண்டவேந்தரை
இழித்து மேல் ஏறினான் தானும் ஏறினான்.

(i) மேல் ஏறினான் எனும் அடிகளால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(ii) இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் எது?

(ஆ) தேன்படு பனையின் றிரல் பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர் இருக்க நிழலா காதே
தெள்ளிய வாலின் சிறுபழத் தொரு விதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணியதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் இருக்க நிழலாகும்மே

அதனால்
பெரியோரெல்லாம் பெரியோருமல்லர்
சிறியோரெல்லாம்
சிறியோருமல்லர்

(i) இப்பாடலில் குறிப்பிடப்படும் நாற்படைகளும் எவை?

(ii) இப்பாடல் உணர்த்தும் உண்மை யாது?

(இ) சூழ்மேதி யிறங்குத் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையிற் றாக்க
வருவிருந்துக் ருபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திருந்
சந்திரர் சுடர்தென் ஆரிய நாடே

(i) இப்பாடலில் நாட்டு வளத்தை விவரிப்பதற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் யாவை?

(ii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையின் பொருத்தப்பாட்டினை விளக்குக?

(ஈ) இந்த சினிமா மொழியை அதன் தன்மையை தனித்துவத்தை உணர்ந்து ஒரு படைப்பாளி அதை அழுத்தமாக கையாளும் போது அங்கே நல்ல சினிமா பிறக்கிறது. இந்த மொழியிலிருந்து மாறுபட்டு, வாய்ப்பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் அங்கே சினிமா நலிவடைகிறது. பேசும்மொழி போலவே இந்த மொழியின் நயம் அதைப் பயன்படுத்தும் படைப்பாளியின் திறனை, கற்பனை வளத்தைப் பொறுத்தது. சூரியன் உதயமாவதைக் கண்டால் ஒருவன் "ஓகோ விடிகிறது" எனலாம். கவிஞன் அதைக் கண்டாலோ "பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்" என்கிறான்.

(i) நல்ல சினிமா பிறப்பதும் நலிவடைவதும் எதனால்?

(ii) மொழியின் நயம் அதைப் பிரயோகிப்பவனைப் பொறுத்தது என்பதை எழுத்தாளர் எவ்வாறு விவரிக்கிறார்?

(உ) கைவேல் - எறிகிறவேல் - இறகுள்ள அம்பு - இல்லாத அம்பு – வாள் - சக்கரம் - இவற்றிற்கு மேலே தெய்வப் படைகளிலுங் கைவைக்கின்ற சமயம், அந்தச் சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேச வந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள், வாதம் இல்லாத இடத்திலும் வாதம் உருவாக்கக் கூடியவர்கள். நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்தது. பிறிற்றோவை ஆகாசத்திலே தூக்கிக் கொண்டு பொய் வைத்து விட்டார்கள் அவர்கள். இராமநாதன் கட்சி சோர்ந்து போய்விட்டது.

(i) பிறிற்றோ கட்சிக்கு பேச வந்தவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

(ii) வாதம் உச்சக் கட்டத்தை அடைந்து விட்டதை ஆசிரியர் எவ்வாறு விபரிக்கிறார்?

(5x4 = 20 புள்ளிகள்)

03. பாரதியார் சுயசரிதை அடிப்படையாகக் கொண்டு,

(அ) நீர் எடுத்துவரும் பெண்ணின் (சிறுமி) அழகு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?

(ஆ) தாம் விரும்பும்போது விண்ணுலகம் அடையத் தடையாக இருப்பது எது?

**அல்லது**

எது நல்ல சினிமா எனும் கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு

(அ) தமிழ் நாட்டில் சினிமா வளராமைக்கான காரணத்தை ஆராய்க.

(ஆ) சினிமா மொழியின் மூன்று அம்சங்களும் எவை? அவற்றை உதாரணத்துடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

04. படிக்காசுப் புலவரின் பாடலடிகளிலிருந்து வெளிப்படும்.

(அ) பஞ்சத்தின் கொடுமை

(ஆ) சீதாக்காதியின் கொடைத்திறன்

**அல்லது**

குகப்படலத்தில்

(அ) பரதன் ஓடத்தில் ஏறும் காட்சி அறிமுகம் செய்யப்படும் விதத்தினை ஆராய்க.

(ஆ) பரதன் சுமத்திரையை அறிமுகம் செய்யுமாறு. (15 புள்ளிகள்)

◉ **05, 06, 07 ஆகிய வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

05. கம்பியூடட்ர் எனும் கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு

(அ) கணினியில் ஆண் பெண் வேறுபாடு.

(அ) கணினியின் பயன்பாடு.

06. நாட்டார் பாடல்களில்

(அ) ஏர்ப்பாடலில் சிவபெருமானை நோக்கி வேண்டுபவற்றை விளக்குக?

(ஆ) அருவி வெட்டும் பாடலில் இளந்தாரிகளின் செயற்பாடுகளுக்கு கூறப்படும் உவமைகளின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

07. திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற பாடப்பகுதியில்,

(அ) நாட்டு வளம்

(ஆ) திரிகூட நாதரின் சிறப்பு (10 புள்ளிகள்)